1975 எப்ரல் 10]

கருத்துக்கள் சொல்கிற எதிர்க்கட்சி பத்திரிகைகளையும் அனுமதிக்க வேண்டும். சில பால் பண்பு ஊட்டுகின்ற பத்திரிகைகள் ஜெயில் கைதிகளுக்கு அனுமதித்தால் மிகவும் சிரமப்படுவார்கள். குடும்பம் இல்லாமல் தனியாக இருக்கிறார்கள். இத்தகைய பத்திரிகைகள் தடை செய்யப்படுமா? அரசியல் கருத்துக்கள் உள்ள பத்திரிகைகள் அனுமதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசியல் கருத்துக்களைத் தடுக்கக் கூடாது. அரசியல் கருத்துக்கள் சம்பந்தப்பட்ட பத்திரிகைகளை வாங்க விரும்பினால் சொந்த செலவில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று ஏற்கனவே சொல்லி விட்டேன். வேறு பத்திரிகைகளைப்பற்றிச் சொன்னார்கள். அதிலே அதிக விவரம் தெரியாது. நிச்சயம் அப்படிப்பட்ட நிலை சிறையில் இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழில் எழுதப்பட்ட பட்டைகள்.

***623** வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா :

மாவட்ட நீதிமன்றங்களில் உள்ள (பியூன்) ஊழியர்கள் அணிந்திருக்கிற பட்டைகளில் உள்ள வார்த்தைகள் ஆங்கிலத்தில் சொல்லப்பட்டு எழுத்து வடிவில் தமிழில் உள்ளவற்றை மாற்றி தூய தமிழில் எழுதும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாடு அரசின் கடைநிலை ஊழியர்களுக்குத் தமிழில் எழுதப்பட்ட பட்டைகள் வழங்கிட அரசு ஆணை பிறப்பித்து விட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : கோர்ட்டிலே, பொதுவாக ஆபீசிலே பியூன்கள் டவாலி போட்டுக் கொள்கிறார்கள். பழைய பிரிட்டிஷ் காலத்தில் இருந்த வழக்கத்தை மாற்றி அவர்களுக்கு புது தமிழில் எழுதப்பட்ட பட்டைகள் வழங்க குறிப்பு ஏதாவது உண்டா அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உயர்நீதி மன்றத்துக்கு கருத்துக்களை அனுப்பினால் அவர்கள் பரிந்துரையைக் கேட்டு, அப்படிப்பட்ட கோரிக்கை கவனிக்க செய்யலாம்.

Meeting of Southern Regional Electricity Board.

***531 Q.**—Thiru N.K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state :—

(*a*) whether a meeting of the Southern Regional Electricity Board was held in Bangalore on 21st June 1974 ;